# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2059 - 2018 පෙබරවාරි මස 16 වැනි සිකුරාදා - 2018.02.16

*2059 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - | நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| முன்னறிவித்தல்கள் | - | மேல் மாகாணம் | - |
| இறுதிக் கட்டளைகள் | - | மத்திய மாகாணம் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - | தென் மாகாணம் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - | வட மாகாணம் | - |
| மேல் மாகாணம் | - | கிழக்கு மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - | வடமேல் மாகாணம் | - |
| தென் மாகாணம் | - | வடமத்திய மாகாணம் | - |
| வட மாகாணம் | - | ஊவா மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - | சப்பிரகமுவ மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - | காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| வடமத்திய மாகாணம் | - | காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | - |
| ஊவா மாகாணம் | - | காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - | நானாவித காணி அறிவித்தல்கள் | 30 |
| | | சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2018, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, மாச்சு மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

29- B81252-353(2018/02)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/54751
மாகாணக் காணி ஆணையாளாரின்
இல. : ப.இ.கொ/6/1/களு/ஹொர/602

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

களுத்துறை மாவட்டம் ஹொரணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 604A, கோறலஇம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கோறலஇம எனும் கிராமத்தில் Ka/HRN/11/313 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் B எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0253 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை சமூக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் ஹொரணை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப் படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : இந்த வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் A மற்றும் C ;
கிழக்கு : இந்த வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் C ;
தெற்கு : இந்த வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் C மற்றும் மு. பி. க. 4340 இன் காணித்துண்டு இலக்கம் 15 ;
மேற்கு : மு. பி. க. 4340 இன் காணித்துண்டு இலக்கம் 15 மற்றும் இந்த வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் A.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2018.01.09 தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

தண்டப்பணம் : இல்லை;

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி சமூக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2018.01.09 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டி. ரி. எம். ஜயதிலக,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 16.

02-442

---

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/54986

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

களுத்துறை மாவட்டம் பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 842A, தினியாவல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தினியாவல எனும் கிராமத்தில் 842A/19 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் B எனக் காட்டப்

பட்டுள்ளதும் 01 ஏக்கர் 02றூட் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை பயிர் செய்யும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் ஜயரத்ன அமரசிங்க விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : திரு. ஜயரத்ன அமரசிங்கவின் சட்டரீதியற்ற காணி;
கிழக்கு : திரு. விஜதசிறி பெரேராவின் எல் எல் காணி;
தெற்கு : திரு. விஜேரத்ன திசாநாயகவின் எல் எல் காணி;
மேற்கு : வன பாதுகாப்பு.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2017.12.22 தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப் படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்து ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50% குறையாமல் இருத்தல் வேண்டும்;

தண்டப்பணம் : வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி பயிர் செய்யும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதி யிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2017.12.22 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கததக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டீ. ரீ. எம். ஜயதிலக,
உதவிக் காணி ஆணையாளர் (காணி),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, சனவரி 24.

2-444

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/32862.
பிரதிக்காணி ஆணையாளரின்
இல.: சிபிசி/எல்சீ/எல்டி/4/1/14/102.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கண்டி மாவட்டம், உடபலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிங்கபிடிய வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சிங்கபிடிய கொலனி எனும் கிராமத்தில் மு. பி. மஹ 725 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 22 எனக் காட்டப் பட்டுள்ளதும் 19.2 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிட நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் செல்வி நிஸங்க ஆராச்சிலாகே ரூப இந்ராணி நிஷங்க என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப் படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 06 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 21 மற்றும் 20 ;
தெற்கு : பாதை ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 05 மற்றும் 23.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம விலை மதிப்பீட்டாளரி னால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் ஆண்டுக்கான வர்த்தக பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்கு தொகை தண்டப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறேந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2014.09.18 ஆந் திகதி தொடக்கம் 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. இதற்கான அனுமதி 2014.09.18 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்கள் நிறைவின் பின்னரே கிடைக்கப்பெறும் ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப் படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செய்யப் பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யு. அயோதா எஸ். ஜயவர்த்தன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 16.

2-488

---

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல.: 4/10/49469
மாகாணக் காணி ஆணையாளாரின்
இல. : என்சிபி/பிஎல்சி/எல் 5/எம்டபிள்யு/04

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

அநுராதபுரம் மாவட்டம், மகவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 371, நவோடகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கட்டடுக்கெலியாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குடியேற்ற

உத்தியோகத்தரின் சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 1.3094 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை பயிர்ச்செய்கை நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் திரு. அமரசிங்க ஆராச்சிலாகே மகேன்திர பத்மசிறி பெரேரா விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப் படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 1647;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 1647;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 1650 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1650.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2017.12.11 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி);

(ஆ) **வருடாந்தக் குத்தகை** .- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2017 ஆம் ஆண்டுக்கான காணியின் வர்த்தக பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்து இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்.

தவணைப் பணம் .- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி பயிர்ச்செய்கை நோக்கத்தை தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2017.12.11 ஆந்திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நினறவு பெறும் வரையிலும் கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதிக்கப்படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப் பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர் (காணி),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 16.

02-489

---

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல.: 4/10/54539
மாகாணக் காணி ஆணையாளாரின்
இல. : நிஇகோ/ஹம்/இ2/திஸ்/தீப.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

அம்பாந்தோட்டை மாவட்டம், அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 24 சிற்ரகல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சிற்ரகல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்விபி 66 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 691 மற்றும் 692 எனக்காட்டப்பட்டுள்ள 0.4835 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளது மான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் சரத் அமரகோன் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 691 மற்றும் எப்விபி 66;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 690 மற்றும் எப்விபி 66;

தெற்கு : காணித்துண்டு இலக்கம் 690 & 693, 691 மற்றும் எப்விபி 66;

மேற்கு : காணித்துண்டு இலக்கம் 691 மற்றும் எப்விபி 66.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2018.01.12 ஆந் திகதியில் இருந்து முன்னோக்கி);

(ஆ) **வருடாந்தக் குத்தகை** .- குத்தகையானது அமுல் படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி யானது ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதம விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைப் பணம் .- தவணைப்பணம் அறவிடப்பட மாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியி லிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறேந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப் பட்ட தினத் திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எஸ். ஏ. எறந்திக்கா டபிள்யு. குலரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, சனவரி 29.

2-585

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.